පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - 2016 අගෝස්තු
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2016 ஆகஸ்ட்
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – AUGUST 2016
மெய்யியல்

## இந்திய மெய்யியல் - (PHG III)

இவ்வினாத்தாளில் எல்லாமாக பத்து ( 10) வினாக்கள் காணப்படுகின்றன. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
நேரம் - மூன்று மணித்தியாலம்.

---

01 .இந்திய மெய்யியலின் பொதுவான பண்புகளையும் சமகாலப் போக்குகளையும் அறிமுகம் செய்க.

02. உபநிடதங்களில் விடுதலை பற்றிய கருத்துக்களை நீர் எவ்வாறு விளங்கிக் கொள்வீர்?.

03. .ஜைனத்தின் சியாத்வாதம் என்றால் என்ன?

04. “ பகவத்கீதையின் ஒரு முக்கிய கருப்பொருள் நிஷ்காமிய கர்மாவாகும். இது கீதையின் மையச் செய்தியாக அல்லது சாரமாக கருதப்படுகிறது” என்று கூறுவது சரியா? கருத்துரைக்குக.

05. சமூக அடுக்கமைவு குறித்த பௌத்தக் கருத்துக்களின் மெய்யியல் முக்கியத்துவத்தை விளக்குக.

06. யோகாசார பௌத்தப் பள்ளியின் பிரதான செயல் இலக்குகளை விமர்சனரீதியாக ஆராய்க.

07. இந்திய மெய்யியலில் சாங்கிய முறையின் பின்வரும் அடிப்படை விடையங்களை நுணுகி ஆராய்க.

1). பிரகிருதி மற்றும் புருஷன்

2) கடவுட் கோட்பாடற்ற யதார்த்தவாதம் ( Athiestic Realism)

08. இராமானுஜரின் பிரம்மம் பற்றிய கருத்துக்களிலிருந்து சங்கரரின் பிரம்மம் பற்றிய கருத்துக்கள் எவ்வாறு வேறுபடுகிறது.? ஆராய்க.

09. **ஒன்றில்**

ரவீந்திரநாத் தாகூரின் கல்வித் தத்துவம் தற்கால யுகத்திற்குப் பொருத்தமானது என்று நீர் நினைக்கின்றீரா? கருத்துரைக்குக.

**அல்லது**

“ மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் யோக மெய்யியலின் வகி பங்கு” குறித்து ஒரு சுருக்கக் கட்டுரை வரைக.

..............................02

**PHG III) – 2016**

10. பின்வருவனவற்றில் **இரண்டிற்கு** குறிப்புரை எழுதுக.

I. இருக்கு வேத பல கடவுட் கோட்பாடு

ii. சாருவாக பொருள் முதல்வாதம்

iii. பௌத்த அரசியல் மெய்யியல்

iv சைவசித்தாந்தத்தின் அறிவாராய்ச்சியல்

v. சூன்யவாத எண்ணக்கரு

=====